www.Padasalai.Net www.CBSEtips.in

FTM

# காலாண்டுத் தேர்வு - 2023

11 - ஆம் வகுப்பு

## வணிகவியல்

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

**I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 20 X 1 = 20

1. இடத்தடை இதன் மூலம் நீக்கப்படுகிறது
அ) போக்குவரத்து ஆ) பண்டகசாலை இ) விற்பனையாளர் ஈ) காப்பீடு
2. அதிக அளவு அபாயத்தைக் கொண்டது
அ) உற்பத்தித் தொழில் ஆ) வணிகம் இ) வியாபாரம் ஈ) இவை அனைத்தும்
3. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது
அ) ஒப்பந்தத்தால் ஆ) கூட்டாளிகளிடையே உறவு இ) அரசின் வழி காட்டல் ஈ) நட்பின் அடிப்படையில்
4. நுகர்வோர் கூட்டுறவு ..................... முதன் முதலாக வெற்றி பெற்றது.
அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா இ) சுவிஸ் ஈ) இந்தியா
5. இந்திய மைய வங்கி என்பது
அ) பி.என்.பி ஆ) எஸ்.பி.ஐ. இ) ஐ.சி.ஐ.சி.ஐ. ஈ) ஆர்.பி.ஐ.
6. மின்னணு வங்கியினை ................. மூலம் செயல்படுத்தலாம்.
அ) கணினிகள் ஆ) கைபேசிகள் இ) ATM அட்டை ஈ) மேலே உள்ள அனைத்தும்
7. பண்டகக் காப்பகம் ..................... மையமாக பொருட்களை வைத்திருக்கிறது.
அ) சந்தையிடுதல் ஆஆ) வரிசைப்படுத்துதல் இ) வழங்கல் ஈ) விற்பனை செய்தல்
8. ................. ஒரு பொதுக் காப்பீட்டு வகையினைச் சார்ந்தது அல்ல.
அ) கடல் சார் காப்பீடு ஆ) ஆயுள் காப்பீடு இ) மருத்துவக் காப்பீடு ஈ) தீ காப்பீடு
9. பெயர்ச்சியியலின் முக்கிய நன்மை
அ) உற்பத்தி மேம்பாடு ஆ) செலவுகளை குறைத்தல் இ) இலாபம் ஈட்டுதல் ஈ) பண்டகக் காப்பு
10. அமெரிக்க வைப்பு இரசீது வெளியிடப்படுவது
அ) கனடா ஆ) சீனா இ) இந்தியா ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
11. நெறிமுறைகள் முக்கியம் .......................... க்கு.
அ) உயர்மட்ட மேலாண்மை ஆ) நடுத்தர அளவிலான மேலாளர்கள்
இ) மேலாண்மையில் இல்லாத தொழிலாளர்கள் ஈ) மேற்கண்ட அனைத்தும்
12. தொழிலின் சமூகப் பொறுப்புணர்வு என்பது நிறுவனத்திற்கு எவ்வாறு உதவுகிறது?
அ) இலாபத்தை அதிகரித்தல் ஆ) இலாபம் இ) நிலைத்தன்மை ஈ) சமநிலை
13. ............. ஒரு சரக்கேற்றி மூலம் பொருட்களைப் பெற்றுக் கொள்வதை ஏற்றுக் கொள்வதற்கான ஆவணம்.
அ) வழிச் சீட்டு ஆ) சரக்குக் குறிப்பு இ) கப்பல் வாடகை ஒப்பாவணம் ஈ) ஒப்பந்த இரசீது
14. உள்ளூர் பகுதி வங்கிகள் ஊக்குவித்து வருவது
அ) கிராம சேமிப்பு ஆ) வணிகச் சேமிப்பு இ) தொழிற்துறை வளர்ச்சி ஈ) விவசாய வளர்ச்சி
15. அரசு நிறுமத்தின் பங்கு முதலீடு .................. க்குக் குறையாமல் அரசு பெற்றிருக்க வேண்டும்.
அ) 75% ஆ) 51% இ) 60% ஈ) 95%
16. பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடு.
அ) கூட்டு பங்கு நிறுமம் ஆ) தனிநபர் வணிகம் இ) அரசு நிறுமம் ஈ) கூட்டுறவு
17. கடன் பத்திரதாரர்கள் ஒரு நிலையான ................ விகிதம் பெறத் தகுதியுடையவர்கள்.
அ) பங்காதாயம் ஆ) இலாபம் இ) வட்டி ஈ) இவை எதுவும் இல்லை
18. பின்வருவனவற்றில் எவை கூட்டுப் பங்கு நிறுமத்தின் பண்புகள்?
i) தனியான சட்ட நபர் தன்மையுடையது அல்ல ii) வரையறு பொறுப்பு
iii) நீடித்த வாழ்வு இல்லை iv) பொது முத்திரை
அ) i மற்றும் ii ஆ) ii மற்றும் iv இ) i மற்றும் iv ஈ) i மற்றும் iii
19. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1) அர்த்தசாஸ்திரம் | - | i) கௌடில்யர் | அ) 1-i, 2-ii, 3-iii, 4-iv, 5-v |
| 2) தணிக்கையாளர் | - | ii) தொழில் முறை | ஆ) 1-iv, 2-iii, 3-ii, 4-i, 5-v |
| 3) தனி நபர் வணிகம் | - | iii) வரையறா பொறுப்பு | இ) 1-ii, 2-iii, 3-i, 4-iv, 5-v |
| 4) கர்த்தா | - | iv) இந்து கூட்டுக் குடும்பம் | ஈ) 1-iii, 2-iv, 3-i, 4-ii, 5-v |
| 5) அட்டவணை | - | v) செயல்முறை விதிகள் | |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com
Scanned with CamScanner

20. **கூற்று (A) :** பன்னாட்டு நிறுமங்கள் குறைந்த செலவில் உள்ள நாடுகளில் தங்கள் வணிகத்தை அமைத்து குறைந்த விலையில் பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்கிறது.
**காரணம் (R) :** இது செலவு நன்மையைப் பெறுகிறது மற்றும் அதன் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை நல்ல தரத்தில் குறைந்த விலையில் விற்கிறது.
அ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான சரியான விளக்கம்
ஆ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான தவறான விளக்கம்
இ) A சரி ஆனால் R தவறு ஈ) A தவறு ஆனால் R சரி

**II குறிப்பு : ஏதேனும் ஏழு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.**
**வினா எண். 30திற்கு கட்டாயமாக பதிலளிக்கவும்.** 7 X 2 = 14

21. பண்டமாற்று முறை என்றால் என்ன?
22. உறங்கும் கூட்டாளி என்பவர் யார்?
23. பன்னாட்டு நிறுமத்திற்கு ஏதேனும் இரண்டு உதாரணங்களை தருக.
24. சிறுகுறிப்பு வரைக. பற்று அட்டை.
25. பெயர்ச்சியியல் என்றால் என்ன?
26. பட்டய நிறுமம் என்றால் என்ன?
27. மடங்குக் கடையின் பொருள் யாது?
28. கடன் கூட்டுறவு என்றால் என்ன?
29. ஏதேனும் ஐந்து முக்கியமான காப்பீடு திட்டாவண வகைகளை பட்டியலிடுங்கள்.
30. இந்தியன் காபி ஹவுஸ் ......................... க்கு உதாரணம்.

**III குறிப்பு : ஏதேனும் ஏழு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.**
**வினா எண். 40திற்கு கட்டாயமாக பதிலளிக்கவும்.** 7 X 3 = 21

31. மனிதச் செயல்பாடுகள் என்றால் என்ன?
32. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
33. கைபேசி வங்கியியல் என்றால் என்ன?
34. சமூகப் பொறுப்புணர்வின் வகைகளை வரிசைப்படுத்துக. (ஏதேனும் இரண்டு)
35. அரசு நிறுமம் என்றால் என்ன?
36. கப்பல் வாடகை ஒப்பாவணம் என்றால் என்ன?
37. வாங்குவோர் மீதான மின்னணு வணிகத்தின் தாக்கம் என்ன? (ஏதனும் மூன்று)
38. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?
39. வணிக நெறிமுறைகள் கருத்து என்றால் என்ன?
40. வணிக நிறுவனங்களுக்கு .............. மற்றும் ................ தேவைகளுக்கு நிதி தேவை.

**IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 X 5 = 35

41. பண்டமாற்று முறைக்கான நிபந்தனைகளாகக் கூறப்பட்டுள்ளன யாவை? ***(அல்லது)***
தனியாள் வணிகத்தின் நன்மைகளை விவரி. (ஏதேனும் ஐந்து)
42. பன்னாட்டு நிறுமத்தின் நன்மைகளை விவரி. (ஏதேனும் ஐந்து) ***(அல்லது)***
சமூகப் பொறுப்பின் அவசியத்தை விளக்கவும்.
43. காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் ஐந்து) ***(அல்லது)***
அமைப்பு முறை ஏட்டின் உள்ளடக்கங்கள் யாவை? (ஏதேனும் ஐந்து)
44. தனி உரிமையியலின் நன்மைகள் யாவை? (ஏதேனும் ஐந்து) ***(அல்லது)***
இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை வகைப்படுத்தவும். (ஏதேனும் ஐந்து)
45. தொழில் நிறுவன ஆளுகையின் நன்மைகள் என்ன? (ஏதேனும் ஐந்து) ***(அல்லது)***
பண்டகசாலைகளின் நன்மைகளை விளக்குங்கள். (ஏதேனும் ஐந்து)
46. பொது கழகத்தின் இயல்புகள் யாவை? (ஏதேனும் ஐந்து) ***(அல்லது)***
வணிகத்தின் பல்வேறு தடைகளை விளக்குக. (ஏதேனும் ஐந்து)
47. ரயில்வே போக்குவரத்தின் நன்மைகளைப் பற்றி விவாதிக்கவும். (ஏதேனும் ஐந்து) ***(அல்லது)***
உலகளாவிய வைப்பு இரசீதிற்கும் அமெரிக்க வைப்பு இரசீதிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?



Kindly send me your study materials to padasalai.net@gmail.com
Scanned with CamScanner

**+1 வணிகவியல் காலாண்டுத் தேர்வு செப் - 23**

**சரியான விடை**

1. (அ) போக்குவரத்து
2. (அ) உற்பத்தித் தொழில்
3. (அ) ஒப்பந்தத்தால்
4. (அ) இங்கிலாந்து
5. (ஈ) ஆர்.பி.ஐ.
6. (ஈ) மேலே உள்ள அனைத்தும்
7. (இ) வழங்கல்
8. (ஆ) ஆயுள் காப்பீடு
9. (ஆ) செலவுகளை குறைத்தல்
10. (ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
11. (ஈ) மேற்கண்ட அனைத்தும்.
12. (இ) நிலைத்தன்மை
13. (அ) வழிச் சீட்டு
14. (அ) கிராம சேமிப்பு
15. (ஆ) 51 %
16. (ஆ) தனிநபர் வணிகம்
17. (இ) வட்டி
18. (ஆ) ii மற்றும் iv
19. (அ) i ii iii iv v
20. (அ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான விளக்கம்

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. பண்டமாற்று முறை** ஒரு பொருள் மற்றொரு பொருளுக்கு மாற்றாக பரிமாற்றம் செய்யப்படும் முறையேப் பண்டமாற்று முறை எனலாம்.

**22. உறங்கும் கூட்டாளி:** தொழிலில் முதலிட்டு, மேலாண்மையில் பங்கேற்காத கூட்டாளிக்கு, உறங்கும் கூட்டாளி என்று பெயர். ஆனால் இவர் நிறுவனத்தின் இலாப நட்டத்தில் மட்டுமே பங்கேற்பார். வெளியாட்களுக்கு அவர் கூட்டாளி போன்று தோன்றாமல் பார்த்துக் கொள்வார்.

**23. பன்னாட்டு நிறுவனத்திற்கு ஏதேனும் இரண்டு உதாரணங்கள் தருக.** பாட்டா, கோல்கேட் பாமொலிவ், சோனி கார்ப்பரேசன், சுசூகி, டைமெக்ஸ்

**24. பற்று அட்டை:** தானியங்கி பணம் வழங்கும் அட்டையே பற்று அட்டை என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவின் எந்தப் பகுதியிலும் பொருள்களை வாங்கவோ அல்லது சேவைகளைப் பெறவோ அதிக அளவில் இந்த அட்டைப் பயன்படுகிறது.

**25. பெயர்ச்சியியல்:** சந்தையுடன் தொடர்புடைய போக்குவரத்துப் பணி பெயர்ச்சியில் மிக முக்கியப் பங்கை வகிக்கிறது. மேலும் மிக நேர்த்தியான ஒன்றுக்கொன்று தொடர்புடைய போக்குவரத்தின் விரிவாக்கமே பெயர்ச்சியியல் ஆகும்.

**26. பட்டய (அ) சாசன நிறுமம்:** ஒரு நாட்டின் அரசராலோ, அரசியாலோ வழங்கப்பட்ட சாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள் பட்டய அல்லது சாசன நிறுமங்கள் என்று அழைக்கப்படுகின்றன. வழங்கப்பட்ட சாசனத்தில் கூறியுள்ள விதிமுறைகளின் படி இவை செயல்படும்.

**27. மடங்குக் கடை:** தயாரிப்பாளாகடைகள் (அ) இடைநிலையர்கள் தங்கள் நிர்வாகத்தின் கீழ் பல்வேறு இடங்களில் ஒரே மாதிரியான கடைகளை அமைத்து தரமான பொருட்களை விற்பனை செய்யும் சில்லரை கடைகள் மடங்கு கடைகள் என்கிறோம். இதனை தொடர் பண்டகச்சாலைகள் எனவும் அழைக்கப்படுகிறது. எகா:- பாட்டா ஷீ கம்பெனி.

**28. கடன் கூட்டுறவு:** உறுப்பினர்களுக்கு குறுகிய கால கடன் வழங்குதலில், தேர்ச்சி பெற்ற சங்கம் கடன் சங்கம் ஆகும். வேளாண்மையினர், கை வினைஞர்கள், தொழில் புரிபவர்கள், ஊதியம் ஈட்டுகிறவர்கள் போன்றவர்களுக்கு, கடனளிக்கும் உன்னத பணியை கடன் சங்கங்கள் செய்து வருகின்றன.

**29. ஏதேனும் 5 முக்கியமான காப்பிடுத் திட்டாவண வகைகளைக் குறிப்பிடுக.** முழு ஆயுள் திட்டாவணம், குறித்த வயது திட்டாவணம், கூட்டு ஆயுள் காப்பீட்டு திட்டாவணம், ஆண்டுத் தொகை திட்டாவணம், குழந்தைகளுக்கான குறித்த வயது திட்டாவணம்.

**30.** இந்தியன் காபி ஹவுஸ் **கூட்டுறவு சங்கத்திற்க்கு** உதாரணம்

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி : 7X3=21**

**31. மனித செயல்பாடுகள்:** மனிதன் தனது தனிப்பட்ட விருப்பங்களையும் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மனிதச் செயல்பாடுகள் என்று பெயர்.

இவை இரண்டு வகைப்படும் அவை:-

பொருளாதாரச் செயல்பாடுகள் மற்றும் பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்.

**பொருளாதாரச் செயல்பாடுகள்** இலாபம் ஈட்டும் தன்மை எகா:- வேலை, பழங்கள் விற்பது.

**பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்:-** உளவியல் தேவையைப் பூர்த்தி செய்வது எகா:- தொண்டு, சமுதாயப் பணிகள்.

**32. வரையறாப் பொறுப்பு:-** தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதன் விளைவாக, அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்த சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும்.

**33. கைபேசி வங்கியியல்:** பெரும்பாலான வணிக வங்கிகள், சுட்டிகை கைபேசிகளில் பதிவிறக்கம் செய்யக் கூடிய கணினி நிரல்களை அதாவது



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

செயலிகள் என்று அழைக்கப்படும் நிரல்களை வடிவமைத்துள்ளன. சுட்டிகை கைபேசிகளில் இருக்கும் இந்தப் பயன்பாட்டைக் கொண்டு ஒரு வாடிக்கையாளர் தனது கணக்கை எங்கிருந்தும் இயக்க முடியும். இந்தச் சேவையினைக் கைபேசி வங்கியியல் என்று அழைக்கின்றோம்.

**34. சமூகப் பொறுப்புணர்வின் வகைகளை வரிசைப்படுத்துக. ஏதேனும் 2**

பொருளாதார பொறுப்புணர்வு

சட்டப் பொறுப்புணர்வு

தொழில் நன்னெறிமுறை பொறுப்புணர்வு

தன் விருப்ப பொறுப்புணர்வு

**35. அரசு நிறுமம்:** 2013ஆம் ஆண்டு நிறுமச் சட்டம் பிரிவு 2 (45) ன் கீழ் அரசு நிறுமம் என்பது மைய அரசு மாநில அரசுகள் தனித்தனியாகவோ கூட்டாகவோ ஒரு நிறுமத்தின் பங்கு முதலில் குறைந்த பட்சம் 51 விழுக்காட்டுக்கு மேல் மைய அரசோ, ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட மாநில அரசுகளோ அல்லது மைய அரசும் ஒன்று அல்லது மேற்பட்ட மாநில அரசுகளும் சேர்ந்து உருவாக்கும் நிறுவனம் ஆகும். ஒரு அரசு நிறுமத்தின் துணை நிறுமமும் அரசு நிறுமமாகவே கருதப்படும்.

**36. கப்பல் வாடகை ஒப்பாவணம்:** சரக்குகள் பெரிய அளவிலான பொருள்கள் ஒதுக்கப்படும் போது, கப்பல் முழுவதையும் அல்லது கணிசமான பகுதியை வாடகைக்கு எடுத்துக் கொள்வது நல்லது.

எந்த வகையான ஆவணத்தின் மூலம் ஒப்பநதம் உருவாக்கப்படுகிறதோ அது "கப்பல் வாடகை ஒப்பாவணம்" என்று அழைக்கப்படும்.

மேலும் இது "பயண ஒப்பந்தம்" அல்லது "கால ஒப்பந்தம்" என்றும் அழைக்கப்படும்.

எந்த நபர் கப்பலை வாடகைக்கு எடுக்கிறாரோ அவர் "ஒப்பந்தக்காரர்" அல்லது சார்ட்டர் நபர் என்று அழைக்கப்படுகிறார்.

**37. வாங்குபவர்கள் மீது மின்னணு வணிகவியல் ஏற்படுத்தும் தாக்கம்** மின்னணு வணிகப் பிரிவு சுமார் 4 கோடி நபர்களுக்கு வேலைவாய்ப்பை நல்கி வருகிறது.

இணையதள சில்லறை வணிகம், இணையதள சேவை வர்த்தகம் போன்ற துறைகளில் தொடங்கப்படும் தொழில்களில் ஏராளமான வேலைவாய்ப்பு பெருகி வருகிறது.

மின்னணு வணிக நிறுமங்கள், பண்டங்கள், பொருள் வழங்கீட்டு முனையங்களை அமைத்தல், அளிப்பு சங்கிலித் தொடர்புகளை ஏற்படுத்துதல் போன்ற கட்டமைப்பை உருவாக்கி மின்னணு வர்த்தகத்தை பலமானதாக மாற்ற, அதிக முதலீடுகளை செய்து வருகின்றன. மின்னணு வணிக நிறுமங்களின், தொழில் முறையையே மாற்றி வருகின்றன.

**38. பாண்டியர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள்:** கொற்கை, சாலியூர், காயல்பட்டிணம், மருகாவூர்பட்டினம், குமரி

**39. வணிக நெறிமுறையின் கருத்து:** தொழிலின் உரிமையாளர்கள், நிர்வாகிகள் மற்றும் தொழில் செய்பவர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுங்குணர்வு தரமே வியாபார நன்னெறி என இலக்கணம் தரப்பட்டுள்ளது. இத்தகைய தர நிலைகள், தொழில் செய்பவர்களின் நன்னடத்தையை தீர்மானிக்கின்றன. மேலும் தொழில் நெறிமுறைகள் வணிக நடத்தையை வெளிப்படுத்துகிறது.

40. வணிக நிறுவனங்களுக்கு **நிலைமுதல் மற்றும் நடைமுறை முதல்** தேவைகளுக்கு நிதி தேவை

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ) பண்டமாற்று முறைக்கான நிபந்தனைகளாக கூறப்பட்டுள்ளன யாவை?**

ஒவ்வொருவரும் தேவைக்கு அதிகமாகப் பொருட்களை இருப்பில் வைத்திருக்க வேண்டும்.

இருவருக்கும் அப்பொருட்கள், உரிமை மாற்றுத் தேவையாக இருக்க வேண்டும். பரிமாற்றத்தின் போது இருவருக்கும் நேரடித் தொடர்பு முக்கியமாகக் கருதப்படும்.

**41.ஆ) தனியாள் வணிகத்தின் நன்மைகளை விவரி**

**எளிதான அமைப்பு:-** தனியாள் வணிகம் மட்டுமே, வியாபார அமைப்பு வடிவங்களில் சட்ட சிக்கல்கள் ஏதுமின்றித் துவங்கலாம். ஒப்பந்தம் பதிவு போன்றவை இவ்வமைப்பிற்கு அவசியம் இல்லை. எனவே, தொழில் தொடங்க விருப்பம் உள்ளவர்கள் எவரும் இத்தொழிலை எளிதில் தொடங்கலாம்.

**கடின உழைப்பிற்கு நேரடி ஊக்குவிப்பு:-** முயற்சிக்கும் வெகுமதிக்கும் நேரடியாக தொடர்பு இருப்பதால், தனியாள் வணிகர் இலாபம் முழுவதற்கும் அவரே உரிமையாளர் ஆகிறார். இது அவருடைய வியாபாரத்தை ஊக்குவித்து, அயராது உழைக்கச் செய்கிறது.

**குறைந்த மூலதனம்:-** தனியாள் வணிகத்தை துவங்க, குறைந்த முதலே போதுமானது. கூடுதல் மூலதனம் தேவைப்பட்டால், கடன் பெற்று வியாபாரத்தில் மேலும் முதலீடு செய்யலாம்.

**கடன் தகுதி:-** தன் வியாபாரக் கடன்களை, தனது சொந்தச் சொத்துக்களில் இருந்தும் தீர்ப்பதால், கடனீந்தோர் எளிதாக கடன் தர முன் வருவர். அதனால் அவருக்குத் தேவையான கடன் வசதி எளிதாகக் கிடைக்க வாய்ப்புண்டு.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**வாடிக்கையாளருடன் நேரடித் தொடர்பு:-** வாடிக்கையாளர்களின் விருப்பங்களைத் தெரிந்து வைத்திருப்பதால் அவர்களின் தேவைகளை எளிதாக நிறைவேற்றுகிறார். அவரின் இணக்கமான நடவடிக்கைகள், வாடிக்கையாளர்களைத் தொடர்ந்து ஆதரவு தெரிவிக்கச் செய்கிறது.

**விரைவான முடிவு:-** தனியாள் வணிகர் ஒருவர் தானே, உரிமையாளராக இருப்பதால் கால தாமதம் இன்றியும், சூழ்நிலைக்கு ஏற்றவாறும் விரைவாக முடிவெடுக்க அவரால் முடியும்.

**42.அ) பன்னாட்டு நிறுவனத்தின் நன்மைகள்:**

**குறைந்த பட்ச கூலி:-** குறைந்த பட்சக் கூலி வழங்கும் நாடுகளில், தனது நிறுவனங்களை அமைப்பதால், குறைந்த செலவில் பொருட்களையும், சேவைகளையும் வழங்க முடிகிறது. அடக்க விலையில் நன்மைகளைப் பெறுவதால், தரமான பொருட்களையும் சேவைகளையும் குறைந்த செலவில் கிடைக்க வகைச் செய்யப்படுகிறது.

**தரமான பொருட்கள்:-** வளங்கள், வசதிகள், அனுபவம், சிறப்பறிவு ஆகியவற்றுடன் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டங்களுக்காக, பன்னாட்டு நிறுவனங்கள், தாராளமாக செலவிடுவதால், தரமான பொருட்களையும், சேவைகளையும் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடிகிறது.

**வாழ்க்கைத் தரம் உயர்கின்றது:-** பன்னாட்டு நிறுமங்கள் தரமான பொருட்களைத் தயாரித்து வழங்குவதால், மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கிறது.

**பயன்படுத்தப்படாத வளங்களை முறையாகப் பயன்படுத்துதல்:-** இவை, தனது சிறப்புத் தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தி, பயன்படுத்தாமல் இருக்கும் மனித வளங்களையும், பயனற்ற சொத்துக்களையும் முழுமையாகப் பயன்படுத்துவதனால் நாட்டின் தேசிய வருமானம் பெருமளவு உயர்கிறது.

**நாட்டின் செலவாணி செலுத்துநிலை வளர்ச்சி:-** இவை, ஏற்றுமதியை அதிகப்படுத்தி வளர்ச்சிக்கு வித்திடுகின்றன. இதனால், நாட்டின் செலுத்து நிலையை பலப்படுத்துகின்றது.

**42.ஆ) சமூகப் பொறுப்புணர்வின் அவசியம்:**

**சுய ஆர்வம்:-** தொழில் அமைப்புகள் சந்தையில் நிலைத்து செயல்படுவதற்கு, சமுதாய எதிர்ப்புகளை நிறைவேற்ற முனைகின்றன.

பொதுவாக சமூகத்தின் தேவை மற்றும் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதன் மூலம் தொழில் உரிமையாளர்கள் அங்கீகரிக்கப்படுகின்றனர்.

எகா:- அதிக ஊதியம் வழங்குதல், சாதகமான பணிச்சூழலை ஏற்படுத்துதல், தொழிலாளர்களை ஊக்குவித்தல், உற்பத்தியை அதிகரித்தல், பணியாளர் சுழற்சி மற்றும் வருகைப் பதிவு இன்மையை குறைத்தல்.

**சமுதாய உருவாக்கம்:-** நாட்டின் வளங்களை முழுமையாக பயன்படுத்துவதன் மூலம் தொழில் நிறுமங்கள் ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்குகின்றன. எனவே, தொழில் நிறுமங்கள் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்ய வேண்டும்.

**சமூக அதிகாரம்:-** தொழில் செய்பவர்களிடம் கணிசமான அளவு சமுதாய அதிகாரம் உள்ளது. அவர்கள் மேற்கொள்ளும் செயல் நடவடிக்கைகள் மக்களின் எதிர்கால வாழ்க்கையை தீர்மானிப்பதாக உள்ளது.

**சமுதாயத்தின் உருவகம்:-** சமூக எதிர்பார்ப்புகளை தொழில் நிறுமங்களால் நிறைவேற்ற முடியும் என்ற எண்ணத்தை மக்கள் மனதில் ஏற்படுத்த வேண்டும். ஒரு வெற்றிகரமான தொழில் மூலம், தொழிலாளர் மத்தியில் நல்ல உறவு முறை ஏற்படுத்துதல் நுகர்வோர் மற்றும் பொருள் பகிர்வாளர்களுக்கும் உதவி புரிய இயலும்.

**பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு:-** தற்போது தொழிலாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் தங்களின் உரிமைகள் பற்றி நன்கு அறிந்துள்ளனர். நுகர்வோர்கள் தரமான பொருட்களுக்கு சரியான விலையைக் கொடுக்கவும் மற்றும் தொழிலாளர்கள் உழைப்பிற்கேற்ற ஊதியம் பெறவும் விரும்புகின்றன.

**சட்டம் மற்றும் ஒழுங்கு:-** நாட்டின் சட்ட ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டு செயல்படுவதன் மூலம் தொழில் அமைப்புகள் தொடர்ந்து வெற்றிகரமாக செயல்பட இயலும்.

**43.அ) காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி**

**மிக்க நம்பிக்கை:-** இக்கோட்பாட்டின் படி காப்பீடு தருநர் மற்றும் காப்பீடு பெறுநர் மிக்க நம்பிக்கை அடிப்படையில் ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்றனர்.

காப்பீடு பெறுநர், கருப்பொருள் பற்றிய அனைத்து உண்மைகளையும் காப்பீடு தருநருக்கும், காப்பீடு தருநர், காப்பீட்டு ஒப்பந்தம் குறித்த அனைத்து தகவல்களையும் காப்பீடு பெறுநருக்கும் தெரிவித்து விட வேண்டும்.

**காப்பீடு பெறுநலன்:-** காப்பீடு பெறுநலன் என்பது காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது நிதி சார்ந்த அக்கறை இருத்தலைக் குறிக்கிறது. காப்பீடு பெறுநருக்கு, காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது, காப்பீடு பெறுநலன் இருக்க வேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**ஈட்டுறுதி:-** ஒருவருக்கு ஏற்பட்ட உண்மையான நட்டத்தை ஈடு செய்வதே ஈட்டுறுதியாகும். காப்பீடு பெறுநருக்கு உண்மையில் எவ்வளவு இழப்பு ஏற்பட்டதோ, அந்த இழப்புக்கு ஈடான தொகை மட்டுமே இழப்பீடாக அளிக்க வேண்டும். இழப்பை விட கூடுதலான தொகை வழங்கப்படாது.

**அண்மைக் காரணம்:-** ஒரு இழப்பு ஏற்பட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்கள் இருப்பின், அதற்குரிய அண்மைக் காரணம் எதுவென காண வேண்டியதைப் பற்றி குறிப்பிடுவது இக்கோட்பாடு ஆகும். காப்பீட்டு ஒப்பந்தத்தின் போது இடர் ஏற்படுவதற்கான காரணங்கள் என்று, காப்பீடு பெறுநர் கூறிய காரணங்களில் அண்மைக் காரணம் இடம் பெற்றிருந்தால் மட்டுமே, காப்பீடு தருநர் இழப்பீடு வழங்குவார்.

**பகிர்ந்தளித்தல்:-** ஒரே கருப்பொருள் ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீட்டு நிறுவனங்களிடம் காப்பீடு செய்யப்பட்டிருப்பின் அதற்கு "இரட்டைக் காப்பீடு" என்று பெயர். காப்பீடு பெறுநருக்கு ஏற்படும் இழப்பினை சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனங்கள், அவரவர் செய்திருக்கின்ற காப்பீட்டு ஒப்பந்த தொகைக்கு ஏற்ப விகிதாச்சார அடிப்படையில் அவரவர்களுக்குள்ள பங்கினை பகிர்ந்து அளித்தல் வேண்டும்.

**பகர உரிமை:-** பகர உரிமை என்பது, ஒருவருக்கு ஏற்பட்ட இழப்பை, காப்பீடு தருநர் ஈடு செய்தபின், காப்பீடு பெறுநர் தனக்குள்ள உரிமைகளை காப்பீடு தருநருக்கு மாற்றிக் கொடுப்பது ஆகும். காப்பீடு பெறுநர் தனக்கு ஏற்பட்ட உண்மையான இழப்பைக் காட்டிலும் கூடுதலாக ஆதாயம் அடைந்து விடக் கூடாது.

அப்படி இலாபம் அடைந்தால், அது ஈட்டுறுதிக் கோட்பாடுக்கு எதிராக அமைந்துவிடும்.

**43.ஆ) அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?**

**பெயர் குறித்த உட்பிரிவு:-** நிறுவனத்திற்கு சட்ட பூர்வமாக அங்கீகரித்த பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும். ஏற்கெனவே நடைமுறையில் உள்ள நிறுமத்தின் பெயரை ஒத்திருத்தல் கூடாது. அமைப்பு முறையேட்டில் உறுப்பினர்களும் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளதால், நிறுமத்தின் பெயருடன் "வரையறுக்கப்பட்டது" என்ற வார்த்தை சேர்க்க வேண்டும்.

**இடங்குறித்த உட்பிரிவு:-** நிறுமத்தின் பதிவு அலுவலகம் அமைந்துள்ள இடம், இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும். தொழில் தொடங்குவதற்கு முன்பே, நிறுமத்தின் பதிவு அலுவலகத்தைத் தெரிவிக்க வேண்டும்.

**நோக்கம் குறித்த உட்பிரிவு:-** நிறுமத்தால் செயல்படுத்தக் கூடிய நோக்கங்கள் அனைத்தையும் இதில் குறிப்பிடப்பட்டிருக்கும். நிறுமத்தின் துணை நோக்கங்கள் மூலம் முக்கிய நோக்கங்களை அடையத் தேவையான வழிமுறைகளும் விளக்கப்பட்டிருக்கும். இதில் குறிப்பிடப் பெறாத எச்செயலிலும் நிறுமம் ஈடுபடாது.

**பொறுப்புக் குறித்த உட்பிரிவு:-** பொறுப்புறுதி நிறுமமாயின், அது கலைப்பிற்குள்ளாக நேரிடும் போது, அதன் நிறுமச் சொத்துக்கள் அந்த நிறுமத்தின் நிதிசார் பொறுப்புகளை தீர்க்க இயலாத நிலையில் ஒவ்வொரு உறுப்பினரும் வழங்குவதாக உத்திரவாதம் அளித்த தொகை இங்குக் குறிப்பிடப்படும்.

**முதல் குறித்த உட்பிரிவு:-** நிறுமத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதல், பங்குகளின் வகைகள் மற்றும் பெயரளவு முதல் (ஒரு பங்கின் குறைந்த பட்ச மதிப்பு) ஆகியவற்றைப் பற்றி இதில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**அமைப்பு குறித்த உட்பிரிவு:-** பங்குதாரர்கள் தாங்கள் ஒருங்கிணைந்து நிறுமமாக செயல்பட விரும்பும், தங்களின் விருப்பத்தை இது வெளிப்படுத்துகிறது. பொது நிறுமம் எனில் ஏழு நபர்களும், தனி நிறுமம் எனில் இரண்டு நபர்களும், அமைப்பு முறையேட்டில் சாட்சிகள் முன்னிலையில் கையெழுத்து இட வேண்டும்.

**44.அ) தனி உரிமையியலின் நன்மைகள்**

**இடர்களைக் குறைத்தல்** தனி உரிமம் பெற்றவர் ஏற்கெனவே சட்டப்படி நடைபெறுகின்ற வியாபாரத்தின் வாணிப உரிமையை பெறுவதால், புதியதாக ஒரு வாணிபத்தைத் துவங்குவதில் உள்ள இடர்களில் இருந்து விடுபடுகிறார்.

**வணிக விரிவாக்கம்** பிராந்திய, தேசிய மற்றும் உலகளாவிய கூடுதல் செலவினங்கள் இல்லாமல் தங்களுடைய வர்த்தகத்தை விரிவுப்படுத்த ஒரு வாய்ப்பு கிடைக்கிறது.

**விளம்பரச் செலவு** வர்த்தகம் சார்புடைய விளம்பரங்கள் அனைத்தும் பொதுவானதாக இருப்பதால் குறைந்த செலவில் பெரும்பாலான விளம்பரச் செலவுகளை தனி உரிமையாளர் மூலம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**செயல்பாட்டிற்கு உறுதுணையாக இருத்தல்** தனி உரிமம் நிதி ஆதாரத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் எந்த இடத்தில் வியாபாரத்தை அமைப்பது, அதை வடிவமைக்கும் முறை, பணியாளர்களுக்கு பயிற்சி வழங்குதல் மற்றும்

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

அன்றாட நடவடிக்கைகளை கையாளும் முறை ஆகியவற்றை முடிவெடுத்து அவைகளை செவ்வனே செய்யும் வழிமுறையை வகுக்கிறது.

**44.ஆ) இந்திய ரிசர்வ்வங்கியின் பல்வேறு பணிகள்:**

**உலக நிதி நிறுவனங்களில் இந்தியாவின் பிரதிநிதி:-** சர்வதேச வங்கியியல் தரநிலைகளுக்கிணங்க நல்லிணக்கம் மற்றும் நிலைத்தன்மையைப் பராமரிப்பதற்காக இந்திய ரிசர்வ் வங்கியானது, வங்கியியல் மேற்பார்வை பேஸல் குழுவுடன் 1997 ஆம் ஆண்டு முதல் இணைந்து செயல்பட்டு வருகிறது. பன்னாட்டு மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கி மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தில் டிசம்பர் 27, 1945 முதல் இந்திய அரசின் பிரதிநிதியாக இந்திய ரிசர்வ் வங்கி இருந்து வருகிறது.

**இந்திய வங்கிகளின் கட்டமைப்பின் ஒழுங்குப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல்:-** நாட்டில் உள்ள அனைத்து வங்கிகளையும் ஒழுங்குபடுத்த விரிவான வழிகாட்டுதல்களை, இந்திய ரிசர்வ் வங்கி வகுத்து வழங்கு வருகிறது. இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் 1934 மற்றும் வணிக வங்கிகளின் ஒழுங்கு முறைச் சட்டம் 1949 ஆகியவற்றின் கீழ் வணிக வங்கிகளுக்கு உரிமம் வழங்குதல், கட்டுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல் போன்ற அதிகாரங்களை ரிசர்வ் வங்கி கொண்டுள்ளது. எந்த வணிக வங்கிகளையும் ஆய்வு செய்யவும், வங்கிகளிடமிருந்து தேவையான தகவல்களைக் கேட்டுப் பெறவும் அதிகாரம் கொண்டிருக்கிறது.

**பணவியல் உச்ச நிலை அதிகாரி:-** விலைவாசி நிலைத் தன்மையையும், பணவீக்கப் போக்குகளையும் ஒழுங்குப்படுத்துதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் நாட்டின் பணவியல் கொள்கையை இந்திய ரிசர்வ் வங்கி தீர்மானிக்கிறது. இது விவசாயத்திற்கான நிதிகளை வழங்குதல், திட்டங்களை அமல்படுத்துவதற்கான ஆதாரங்களைத் திரட்டுதல், வங்கிக் கடன் மற்றும் சர்வதேச நிதி சம்பந்தமான சட்டங்களை இயற்றுதல் பற்றிய ஆலோசனைகளை அரசுக்கு வழங்குகிறது.

**பொருளாதார அளவுருக்களை கூர்ந்து கண்காணித்தல்:-** பொருளாதாரத்தின் பரந்த அளவுருக்கான வேலைவாய்ப்பு நிலை, விலைவாசி அளவுகள் மற்றும் உற்பத்தி அளவு, வர்த்தக சுழற்சிகள், அயல்நாடுகளின் முதலீட்டு உள்ளீடுகள் மற்றும் செலுத்தல் சமநிலை போன்றவைகளை இந்திய ரிசர்வ் வங்கி கூர்ந்து கண்காணித்துப் பொருளாதார உறுதித்தன்மை மற்றும் வளர்ச்சியை அடைவதற்கு உதவுகிறது. இந்திய ரிசர்வ் வங்கியின் நிதி மேற்பார்வை வல்லுநர்குழு, குறைந்த பட்சம் மாதத்திற்கு ஒரு முறையாவது (சில சமயம் ஒவ்வொரு நாளிலும்) கூடி, நாடு முழுவதும் நடப்பு நிகழ்வுகள் அனைத்தையும் கவனமாகக் கண்காணித்து முடிவெடுக்கிறது.

**புதிய சவால்களுக்கு உடனடியாகப் பதிலளிப்பது:-** இந்திய வங்கி அமைப்புக்கு எதிராக எப்பொழுதெல்லாம் புதிய சவால்கள் எழுந்தாலும், இந்திய ரிசர்வ் வங்கி உடனடியாக ஒரு குழுவினை ஏற்படுத்தி, ஆய்வு செய்தல் மற்றும் தலைமை சுற்றறிக்கைகளை வெளியிடுதல் போன்ற பணிகளை மேற்கொண்டு, இந்திய வங்கிகளை வலுப்படுத்துகிறது. ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கைகள் மற்றும் வல்லுநர் குழு அறிக்கைகளில், வளம் சேர்க்கும் பல தகவல்களைக் காணலாம்.

**45.அ) பெருநிறுவன ஆளுகையின் நன்மைகள்**

பல்வேறுபட்ட பங்குதாரர்களின் நலன்களை சீரமைத்தல்.

முதலீட்டாளர்களின் (அ) பங்குதாரர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துதுல். மற்றும் அதன் மூலம் முதலீட்டை மற்றும் பங்குகளை வாங்கச் செய்தல்.

அமைப்புகள் பங்குதாரர்களின் பயன்பாட்டை சரியான முறையில் கையாளுகிறது.

வள ஆதாரங்கள் சிறந்த முறையில் பங்கு ஒதுக்கீடு செய்வதற்கு வழி வகுக்கிறது.

தொழில் நெறிமுறைகளை வலுப்படுத்துகிறது.

**45.ஆ) பண்டகக் காப்பின் நன்மைகள்**

1. சரக்குகளை சேமித்து வைக்க இட வசதி இல்லாத வியாபாரிகளின் சரக்குகளை பாதுகாக்க பயன்படுகின்றது.
2. சரக்குகள் மொத்தமாக சேமித்து வைப்பதன் மூலம் வியாபாரிகளின் விநியோக செலவுகளைக் குறைக்கிறது மற்றும் வியாபாரிகள் தங்களுக்கு தேவைப்படும் பொருட்களை சிறிய அளவில் எடுத்துக்கொள்ள உதவுகிறது.
3. இது வழங்கல் வழியை தீர்மானிக்க உதவுகிறது. உற்பத்தியாளர் இதன் மூலம் மொத்த வியாபாரி அல்லது சில்லறை வியாபாரி என யாரை நியமிக்கலாம் என முடிவு செய்ய உதவுகின்றது.
4. இது ஆண்டு முழுவதும் விற்பனைக்கு உதவுகிறது மற்றும் "பொருள் இல்லை" என்ற நிலை ஏற்படாமல் தவிர்க்கிறது.
5. திறமையான மற்றும் திறமையற்ற தொழிலாளர்கள் இருவருக்கும் வேலை வாய்ப்புகளை உருவாக்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகின்றது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**46.அ) பொது கழகத்தின் இயல்புகள் (ஏதேனும் ஐந்து மட்டும்)**

**தனித்தியங்கும் சட்டத் தன்மை:-** மத்திய அல்லது மாநில அரசால் இயற்றப்படும் தனிச்சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்படுகிறது. அச்சட்டத்தின் மூலம் அதற்கான அதிகாரங்கள் நோக்கங்கள் பணிகள் மற்றும் பாராளுமன்றம் அல்லது சட்டச்சபையின் மூலம் உருவாக்கப்பட்ட அமைச்சகத்துடன் தொடர்புள்ளது.

**நீடித்த நிலைத்தன்மை:-** பொது முத்திரையுடன் நீடித்த நிலைத்த தன்மையுடன் சட்டபூர்வமாக செயல்படும். அரசுடன் தொடர்புடையது மட்டும் அல்லாமல், தனித்து இயங்கக் கூடியது. இதன் சொத்துக்கள் அனைத்தும் தனக்குச் சொந்தமானதும், தன் பெயரிலேயே உடன்படிக்கை செய்யவும் வழக்குப் பதியவும் இயலும்.

**அரசின் முதலீடு:-** தனக்குத் தேவையான முதல் முழுவதையும் அரசிடமிருந்து பெறுகிறது. எனினும், முதலீட்டுச் சந்தையிலிருந்தும் மூலதனத்தைத் திரட்டுகின்றன.

**நிதி தன்னாட்சியுரிமை:-** பொதுக்கழகங்கள் நிதி தன்னாட்சி பெற்றவை. தனக்கான வரவு செலவுத் திட்டத்தை தானே தயாரித்துக் கொள்ளவும், அதற்கான அதிகாரம் பெற்றுக் கொள்ளவும் மற்றும் வியாபாரத்தில் அந்த நிதியை பயன்படுத்தவும் அதிகாரம் பெற்றவையாகும்.

**இயக்குனரவையால் நிர்வாகம்:-** அரசால் பரிந்துரைக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்ட இயக்குனரவைக்கு மேலாண்மை செய்யும் அதிகாரம் உண்டு. ஆனால், கழகத்தின் அன்றாட நடவடிக்கைகளில் அரசின் தலையீடு இல்லை.

**பணியாளர்கள் நியமனம்:-** தனக்குத் தேவையான பணியாளர்களை தானே நியமனம் செய்து கொள்ளவும், ஊதியம், பணித்தன்மை ஆகியவற்றை கழகங்களே முடிவு செய்து கொள்ளலாம்.

**46.ஆ) வணிகத்தின் பல்வேறு தடைகள்**

**ஆள்சார் தடை:-** பொருள்கள் தேவைப்படும் நபர்களையும், நியாயமான விலையில் வாங்க விரும்புபவர்களையும் தொடர்பு கொள்ள முடியாத நிலை உள்ளது. உற்பத்தியாளரும் நுகர்வோரும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட வாய்ப்பே கிடையாது. இக்குறைபாடே ஆள்சார் தடை எனப்படும். வணிகத்தின் முக்கிய அங்கமாகத் திகழும் வியாபாரம் இக்குறைபாட்டை நீக்க உதவுகிறது.

**இடத்தடை:-** பொருட்கள் ஒரு இடத்தில் உற்பத்தி செய்யப்பட்டு, நாடு முழுவதும் மற்றும் உலகம் முழுவதும் உள்ள நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. உற்பத்தியாளரையும், நுகர்வோரையும் பிரிக்கும் தூரமே இடத்தடை எனப்படுகின்றது. இத்தடை போக்குவரத்தின் மூலம் நீக்கப்படுகின்றன.

**காலத்தடை:-** ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் ஆண்டு முழுவதும் தேவை ஏற்படும். தேவையைக் கணக்கில் கொண்டு பேரளவு உற்பத்தி செய்து நுகர்வோரிடம் விற்கத் தயார் நிலையில் பொருட்களை வைத்திருக்க வேண்டும். பண்டகக் காப்பகம் காலத்தடையை நீக்குகிறது.

**இடர் மற்றும் பொருட்கள் தரம் கெடாமல் இருக்கத்தடை:-**பொருட்கள் முறையாக சிப்பம் கட்டுதல் மற்றும் நவீன குளிர்சாதன வசதி கொண்ட பண்டகசாலைகள் ஆகியவற்றால் பொருட்களின் தரம் குறையாமல் பாதுகாக்கப்படுகிறது. பொருட்கள் பூச்சிகள், எலிகள் ஆவியாதல் போன்றவைகளுக்கு எதிராக பாதுகாக்கப்படுகின்றன.

**நட்ட இடர்பாட்டுத்தடை:-** ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இருப்பு வைக்க பொருட்களைக் கொண்டு செல்லும் போது ஆட்களாலும், இயற்கையாலும் நட்டம் ஏற்பட வாய்ப்பு உண்டு. இவ்விடர் தீக்காப்பீடு, கடல்சார் காப்பீடு மற்றும் பொதுக்காப்பீடு மூலம் நட்டம் நிவர்த்தி செய்யப்படுகின்றன.

**அறிவுசார் தடை:-** சந்தை நிலவரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியாததால் நுகர்வோர் தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்க இயலாமல் போய்விடக்கூடும். இது அறிவுசார் தடை எனப்படும். நல்ல விளம்பரம் மற்றும் விற்பனையாளர் சேவைகள் மூலம் இத்தடை நீக்கப்படுகின்றன.

**பண்டப்பரிமாற்றத் தடை:-** பணம் பண்டப்பரிமாற்றத்தில் முக்கிய பங்கு வகுக்கிறது. பொருட்களுக்கு உண்டான சரியான விலையை செலுத்துவதன் மூலம் எந்தவொரு தயாரிப்பு அல்லது சேவைகளையும் வாங்குதல் மற்றும் விற்பது ஆகியவற்றை செயல்படுத்துகிறது.

**நிதித்தடை:-** உற்பத்தியாளர்களுக்கு, வர்த்தகர்களுக்கு அவசியமான நேரத்தில் தேவையான நிதி கிடைப்பதில்லை. நிதி ஆதாரம் குறைந்து, வியாபாரம் தடைப்படுதலே நிதித்தடை எனப்படுகின்றது. இத்தடை, வங்கி மற்றும் நிதி நிறுவனங்களால் நீக்கப்படுகின்றன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**47.அ) தொடர்வண்டி போக்குவரத்தின் நன்மைகள்**

உற்பத்தி திறனை அதிகரிக்கிறது.

அதிகமான பொருட்களுக்கான தேவை மற்றும் பல்வேறு நுகர்வுப் பொருள்களின் தேவையைத் தூண்டுகிறது.

சந்தையை மேம்படுத்துகிறது மற்றும் வளர்ந்து விரிவடையச் செய்கிறது.

இது நாடு முழுவதும் பொருட்களை விநியோகிப்பதன் மூலம் விலை உறுதிப்பாட்டிற்கு உதவுகிறது.

இது பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது.

இது விசேப்படுத்தி அதிக அளவு உற்பத்திக்கு உதவுகிறது.

உற்பத்தி, தயாரிப்பு மற்றும் வடிவமைப்பில் புதுமைகளை ஊக்குவிக்கிறது.

| 47 ஆ அடிப்படைகள் | உலகளாவிய வைப்பு இரசீது | அமெரிக்க வைப்பு இரசீது |
|---|---|---|
| மதிப்பிடுதல் | இது எந்த நாட்டுப் பணத்தின் மதிப்பிலும் குறிப்பிடப்படும் | இது அமெரிக்க டாலரில் மட்டுமே குறிப்பிடப்படும். |
| யாருக்கு இது வெளியிடப்படும் | ஒன்று அல்லது அதற்கு மேல் உள்ள சந்தையில் உள்ள முதலீட்டாளருக்கு வெளியிடப்படும். | அமெரிக்க குடிமகனாக உள்ள முதலீட்டாளருக்கு மட்டுமே வெளியிடப்படும். |
| எங்கு பட்டியலிடப்படும் | அமெரிக்கா தவிர்த்த, இதர பங்கு மாற்றகங்கள் | அமெரிக்கப் பங்கு மாற்றகங்களில் மட்டும் பட்டியலிடப்படும். |
| ஒப்புதல் | இதனை வெளியிட, அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒப்புதல் தேவை இல்லை. | இதனை வெளியிட அமெரிக்கப் பிணையங்கள் மற்றும் மாற்றக இயக்கத்தின் ஒப்புதல் தேவை. |
| வெளியீட்டு வழிமுறை | இவை, பட்டியலிடப்பட்ட முழுமையான எண்ணிக்கை உடைய நேர்மைப் பங்குகளாக வெளியிடப்படும். | இவை, சிறு அலகுகளாக பிரிக்கப்பட்ட நேர்மைப் பங்குகளாக வெளியிடப்படும். |
| மாற்றுகைத் தன்மை | உலகம் முழுவதும் மாற்ற கூடியது. | அமெரிக்காவில் மட்டும் மாற்றதக்கது. |

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com